மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் நேற்று (12.5.2025) திருவள்ளூர் மாவட்டம். பூண்டி வட்டாரம், திருப்பாச்சூர், துணை சுகாதார நல வாழ்வு மையத்தில் ரூ.27 கோடி மதிப்பீட் சமுதாய அளவிலான புற்றுநோய் கண்டறியும் திட்டம் விரிவாக்கம் தொடக்க விழாவில், பெண் சுகாதார தன்னார்வலர்களிடம் புற்றுநோய் கண்டறிவதற்கான அழைப்பிதழ்களை ஒப்படைத்தார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சசிகாந்த்செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, எஸ்.சந்திரன், துரை சந்திரசேகர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் மரு.கிருஷ்ணராஜ், திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ரேவதி. ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர். திரு. வை.ஜெயக்குமார். இணை இயக்குநர் மரு.அம்பிகா சண்முகம், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.பிரியா ராஜ், மரு.பிரபாகர் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

சிறந்த நூல்கள் - பதிப்பகத்தாருக்கு பரிசு! விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 13-

தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் அழகு காப்பாய்! இதுதான் நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாகும்!! என்னும் பாவேந்தரின் கவிதை முழக்கத்தைத் தமிழ்நாடு அரசு தலைமேற்கொண்டு, தமிழுக்கு அழகூட்டும் நன் முயற்சியின் விளைவுதான் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகச் செயற்படுத்தப் படும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் பெருந்திட்டமாகும். அறிவு வளர்ச்சியில் அக்கறை இல்லாச் சமூகம் உயர இயலாது என்பதை உணர்ந்தே தமிழ்ச் சமூகம் காலந்தோறும் செயலாற்றி வருகின்றது. வரலாறு அறியப்படாத காலம்தொட்டே இலக்கிய இலக்கணப் படைப்புக்களைத் தருவதில் தமிழ்வாணர்கள் ஏற்றமுடனே இருந்து வருகின்றனர் என்பது கண்கூடு. அந்நிலை இன்றும் தொடர்வதன் அறிகுறியே, இன்றும் தமிழில் எண்ணற்ற நூல்கள் வெளிவருவதே. காலந்தோறும் இந்நன்னிலை தொடருவதற்கே இப்பெருந்திட்டம் ஆக்கம் பெற்றுள்ளது.

அருவி நீர்த்துளிகளைப் போல ஆர்த்தெழும் நூல்களில், கால நீரோட்டத்தை எதிர்த்துப் பயன் தரத்தக்கனவாக திட்பமும் நுட்பமும் நிறைந்தனவாக அமைவன சிலவே. அத்தகைய நூல்கள் வெளிவருதலின் இன்றியமையாமையை உணர்ந்து, கதை புனைவோரை - காவியம் படைப்போரை - கட்டுரையாளர்களை - ஆய்வு முனைவோரை ஊக்குவிக்க, அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவினரால்; அரசால் வகுக்கப்பட்ட விதிமுறைகளுக்கேற்ப; வரப்பெறும் நூல்களை ஆய்வு செய்து அறிஞர்களின் மதிப்பீடுகளைப் பெற்று, தமிழுக்குத் தகத்தகாய நூல்களைப் படைத்தளித்த நூலாசிரியர்களுக்கும், அந்நூல்களை வெளியிட்ட பதிப்பகத்தாருக்கும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கிப் பெருமை கொள்கின்றது.

அவ்வகையில், 2024 ஆம் ஆண்டில் (01.01.2024 முதல் 31.12.2024 வரை) தமிழில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ள 33 வகைப்பாடுகளின் கீழ், பரிசுப்போட்டிக்கு வரவேற்கப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வகைப்பாட்டிலும் சிறந்த நூலாக ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்குப் பரிசுத்தொகையாக ரூ.50,000/ அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்குப் பாராட்டுத் தொகையாக ரூ.25,000/ என ஒரு நூலுக்கு ரூ. 75,000/ வரை பரிசுத்தொகைகள் வழங்கப்பெறும்.

நூல் வகைப்பாடு:

1. மரபுக்கவிதை 2. புதுக்கவிதை 3. புதினம் 4. சிறுகதை 5. நாடகம் (உரை நடை, கவிதை) 6. சிறுவர் இலக்கியம் 7. திறனாய்வு 8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் 9. பிறமொழி களிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள் 10. நுண் கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்) 11. அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ் 12. பயண இலக்கியம் 13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு 14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிக வழிகளும், அகழாய்வு 15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் 16. பொறியியல், தொழில் நுட்பவியல் 17. மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல் 18. சட்டவியல், அரசியல் 19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல் 20. மருந்தியல், உடலியல், நலவியல் 21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்) 22. சமயம், ஆன்மிகம், அளவையியல் 23. கல்வியியல், உளவியல் 24. வேளாண்மையியல், கால்நடையியல் 25. சுற்றுப்புறவியல் 26. கணினியியல் 27. நாட்டுப்புறவியல் 28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம் 29. இதழியல், தகவல் தொடர்பு 30. பிற சிறப்பு வெளியீடுகள் 31. விளையாட்டு 32. மகளிர் இலக்கியம் 33. தமிழர் வாழ்வியல்

பரிசுக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின் வலைதளத்திலோ (www.tamilvalarchithurai.org/siranthanool) இலவசமாகப் பதிவிறக்கம் (Download) செய்து பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் வாயிலாகப் பெற 23X10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் 10 ரூபாய் அஞ்சல் வில்லை ஒட்டி அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் 5 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100/ "தமிழ் வளர்ச்சி இயக்குநர், சென்னை" என்ற பெயரில் வங்கிக் கேட்புக் காசோலை (Demand Draft) சேர்த்து அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள்: 16.06.2025

அனுப்ப வேண்டிய முகவரி:

தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008. தொலைபேசி எண்கள். 044 28190412, 28190413

ஜம்மு -காஷ்மீர், பஞ்சாபில் உயர்கல்வி பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த

மாணவர்களை சொந்த ஊர்களுக்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அனுப்பி வைத்தார்!

திருவள்ளூர், மே 13; -

இந்தியா -பாகிஸ்தான் இடையே நடந்த போரை தொடர்ந்து ஜம்மு -காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களில் பதற்றமான சூழல் நிலவியது. இதனால் அங்கு வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம், பட்டுவளர்ப்பு, ஆடை வடிவமைப்பு, தேசிய தொழில் நுட்ப கழகம் உள் ளிட்ட உயர் கல்வி பயிலும் தமிழ் நாட்டை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாண வர்கள், தமிழ்நாடு திரும்ப இயலாமல் அவதிப்பட்ட னர். அவர்களை மீட்டு வர தமிழ்நாடு அரசுக்கு வந்த கோரிக்கையை தொடர்ந்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைப்படி அமைச்சர் சா.மு.நாசர், ஒன்றிய அரசு மற்றும் ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவர்களை ரயில் மூலம் அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் படி 33 மாணவர்கள் போர்க்கால அடிப்படையில் ரயில் மூலம் நேற்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தனர். அவர்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.

மேலும் தமிழக அரசால், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், மேலும் அங்குள்ள மாணவர் களும் தமிழ்நாடு திரும் புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சா.மு. நாசர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியின் போது அயலக தமிழர் நலத்துறை ஆணையர் வள்ளலார். அயலக தமிழர் நலத்துறை வாரிய உறுப்பினர் ராம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே நடந்த போரை தொடர்ந்து ஜம்முகாஷ் மீர், பஞ்சாப் மாநிலங்களில் பதற்றமான சூழல் நிலவி வருவதால் உயர் கல்வி பயிலும் தமிழ்நாட்டை சேர்ந்த 33 மாணவர்கள் போர்க்கால அடிப்படையில் ரயில் மூலம் நேற்று சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்தவர்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார் அருகில் அயலக தமிழர் நலத்துறை ஆணையர் வள்ளலார். அயலக தமிழர் நலத்துறை வாரிய உறுப்பினர் ராம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி தி.மு.க சார்பில் பகுதி செயலாளர் என்.சந்திரன் தலைமையில் பழவந்தாங்கல் சுரங்கப்பாதை அருகில் நடைபெற்ற "நாடு போற்றும் நான்கு ஆண்டு; இது தொடரட்டும் பல்லாண்டு கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கழக பேச்சாளர்கள் அரங்கநாதன், ரிஷி சந்தோஷ் ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றினார்கள். இதில் ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப.குணாளன், பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ்.கே.இப்ராகிம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், ஜெயராம் மார்த்தாண்டன், எஸ்.சுந்தர்ராஜன், ஏ.சாலமோன், ர.பாபு, ராஜேஸ்வரி சத்யா, இ.ரமேஷ், தேவி, அமுதம் பிரியா, பூங்கொடி, டி.ஏசுதாஸ், ஜெ.நடராஜன், இ.உலகநாதன், ஏ. ஆர்.சரவணா, கே.ஆர்.ஜெகதீஸ்வரன், ஏ.வேலவன், கே.பி முரளி கிருஷ்ணன், எம்.ஆர் சீனிவாசன், கே.செல்வேந்திரன், டி.ரவி,, கிருஷ்ணமூர்த்தி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - டி.ஆர்.பாலு எம்.பி. - சைதை பி.பாஸ்கர் சிறப்புரை!

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! ஏ.கே.கருணாகரன் தலைமை!

காஞ்சிபுரம், மே. 13

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மக்களுக்காக அயராது உழைக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் இன்று (13.05.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, அஸ்தினாபுரம், 14 வது தெரு, சதுர குன்று விநாயகர் கோயில் அருகில் நடைபெறுகிறது.

செம்பாக்கம் வடக்கு பகுதிச் செயலாளர் ஏ. கே.கருணாகரன் தலைமை வகிக்கிறார்.

மாவட்டப் பிரதிநிதி க.ரமேஷ், சரண்யா மதுரை வீரன், எச்.பாஸ்கர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

ஏ.வீரபத்திரன், கே.பூபதி, சரஸ்வதி சந்திரசேகர், டி. கார்த்திக், சி.ஆர்.மதுரைவீரன், ம.பற்குணன், ஓ. தண்டபாணி, ஜி.ஜெகநாதன், பி.பாலச்சந்தர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சைதை பி.பாஸ்கர், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், இ.எஸ். பெர்னாட், இரா.சுரேஷ், ரத்னா லோகேஸ்வரன், அ.தமிழ்மாறன், என்.நவீன், மு.ரஞ்சன், க.தேவேந்திரன், மு.நாகலிங்கம், த.ராஜாராமன், கே.தனசேகரன், வே. தாமோதரன், எம்.ஐ.டி. எஸ்.விஜய், ஜெ.வேணுகோபால், வ.விஜயரங்கன், என். எஸ்.மதனகோபால், கோ. ஜானகிராமன், ஜெ.இன்சமாம், சி.ஆர்.எம்.மனோஜ் குமார், எம்.சுந்தரமூர்த்தி, டி.அஜித், எஸ்.நிர்மலா மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

செம்பாக்கம் வடக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் எல்.டெல்லி பாபு நன்றி கூறுகிறார்.

சுதந்திர தின விழாவின் போது பெண்களின் முன்னேற்றத்திற்கு சேவை புரிந்த

சமூக சேவகர் - தொண்டு நிறுவனங்களுக்கு விருதுகள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே.13-

சுதந்திர தின விழாவின் போது, பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த சமூக சேவகர் (ம) தொண்டு நிறுவனத் திற்கான விருதுகள் தமிழ்நாடு அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. சிறந்த சமூக சேவகருக்குரூ.50,000/ ரொக்கப்பரிசு (ம) சான்று வழங்கப்படும். சிறந்த தொண்டு நிறுவனத்திற்கு ரூ.1,00,000/ ரொக்கப்பரிசு (ம) சான்று வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, சிறந்த சமூக சேவகர் (ம) சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான விருதுகள் வழங்கப்படவுள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்கள் அனைத்தும் 12.5.2025 முதல் தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிறந்த சமூக சேவகர் (ம) தொண்டு நிறுவனத்திற்கான விருதுகள் பெற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டியவர்களின் தகுதிகள்:

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகள், பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து, மகளிர் நலனுக்காக தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றும் சமூக சேவகர் (ம) தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

இணையதளத்தில் விண்ணப்பித்தவர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நேரில் சென்று ஒப்படைக்க வேண்டியவை :

விண்ணப்பதாரரின் கருத்துரு (Booklet - 4) தமிழ் 2, ஆங்கிலம்2 புத்தக வடிவத்தில் தயாரிக்கப்பட்டு, புகைப்படத்துடன் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஒரு பக்கம் தனியரை பற்றிய விவரம் - தமிழ் (மருதம் எழுத்துருவில்) மற்றும் ஆங்கிலம் (Soft copy & Hard copy)

இணைப்பு - படிவம் I & II, தமிழ் (மருதம் எழுத்துருவில்) மற்றும் ஆங்கிலம் முழுவதுமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும். (Soft copy & Hard copy)

எனவே, அனைத்து மாவட்டங்களிலும், பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த சமூக சேவகர் (ம) சிறந்த தொண்டு நிறுவனங்கள், இணையதளத்தின் மூலம் வருகின்ற 12.06.2025க்குள் கருத்துருக்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

மும்பை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் திராவிட கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் 134வது பிறந்தநாள் விழா மும்பை தி.மு.க. பொறுப்புக்குழு தலைவர் ம.சேசுராசு தலைமையில் தாராவியில் உள்ள கலைஞர் மாளிகையில் நடைபெற்றது. பொறுப்புக்குழு உறுப்பினர் ம.நீதிதுரை வரவேற்புரையாற்றினார். பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். பாவேந்தர் பாரதிதாசனார் படத்தை பம்பாய் திருவள்ளுவர் மன்றம் மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் திறந்து வைத்தார். மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், மராத்திய மாநில விசிக அமைப்புச் செயலாளர் சாலமோன் ராசா, மும்பை பகுத்தறிவாளர் கழகம் தலைவர் அ.ரவிச்சந்திரன் மற்றும் ஆ.பாலசுப்பிரமணியன், இரா.மதியழகன், எஸ்.பி. செழியன், பேலஸ்துரை, அப்துல் திவான் மைதீன், வே.ரவிச்சந்திரன்சே ரை ச.பிரகாஸ், எம்.ராஜன் (Rdo), சுப.காளிமுத்து, அ.கண்ணன், சங்கர் திராவிட், பொய்சர் க.மூர்த்தி, பி.எஸ்.அழகுராஜா, கிருஸ்ண மூர்த்தி, பெருமாள், செல்வி க.அறிவுமதி,செந்தமிழரசி, அறிவுமலர் ஆகியோர் உரையாற்றினார்கள். மும்பை இலெமுரியா அறக்கட்டளை தலைவர் சு.குமணராசன் சிறப்புரையாற்றினார். தாராவி தி.மு.க. பிரமுகர் ஆர்.ரவிரஜினி நன்றி கூறினார்.